Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


# திருச்சியில் குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2021
மே 29
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 2 மணி வரை

தேவசெய்தி :

**Dr. ஆனந்தஸ்திரா குடும்பத்தினர்**



தொடர்புக்கு : (0431) 2765386, 80987 42638, 94888 45627

SCAN ME




You Tube சேனலில் பார்க்க தவறாதீர்கள்


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,


# அன்பரின் ஊழியம்
## ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:5 மே 2021 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL:7 ISSUE NO:5 May 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-




# தேவனோடு நெருங்க வைக்கும் பரிசுத்த ஆவியானவர்



# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் கர்த்தர் செய்த அற்புதங்கள்

## இயற்கையை கட்டுப்படுத்தி ஆச்சரியமான அற்புதத்தை செய்து இயேசுவை பரிகாசம் பண்ணினவர்களை தமது மனதுருக்கத்தால் சந்தித்து இன்றைக்கு போதகராக மாற்றின தேவனுக்கு ஸ்தோத்திரம்!



எனது பெயர் முருகேசன். எனக்கு விவரம் தெரிந்த பிற்பாடு கடவுளே இல்லை என்ற கொள்கையை கடைபிடித்தேன். ஒரு சமயம் கத்தோலிக்க தேவாலயத்தில் வைக்கப்பட்ட இயேசு சிலையின் மீது செருப்பு மாலையை போட்டேன். கிறிஸ்தவர்களை கண்டாலே எனக்கு பிடிக்காது. இவர்கள் மாய்மாலம் பண்ணுகிறவர்கள் என்று கூறுவேன். எந்த ஒரு மதத்திலும், வேதத்திலும் நம்பிக்கை இல்லாமல் இருந்தேன். இந்நிலையில் (15 வருடங்களுக்கு முன்னர்) ஈரோடு சி.எஸ்.ஐ. ஆலய மைதானத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர் மேடைக்கு வருவதற்கு முன்பு மழை பெய்து கொண்டிருந்தது. பிற்பாடு அவர் ஜெபம் செய்து கொண்டிருந்தபொழுது கனத்த மழை பெய்தது. (அது நவம்பர் மாதம் மழை காலம்) வேடிக்கை பார்க்க வந்த எனக்கு மிகவும் அதிர்ச்சியான சம்பவம் நடந்தது. அது என்னவென்றால், சகோதரன் மேடைக்கு வந்தவுடன் முதலாவது ஜெபம் செய்தார். அவர் ஜெபிக்கும் பொழுது இயேசுவின் நாமத்தில் "ஒரு சொட்டு மழையும் மைதானத்திற்குள் விழக் கூடாது, மைதானத்திற்கு வெளியே பெய்து கொண்டிருக்கிற மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கட்டும்" என்று கூறினார். சாதாரணமாக வழியோரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நான் ஒரு அதிசயத்தை பார்த்தேன். மைதானத்திற்கு வெளியே நல்ல மழை பெய்தது, மைதானத்திற்குள் ஒரு சொட்டு மழையும் விழவில்லை. சகோதரன் சொன்ன வார்த்தை அப்படியே நிறைவேறிற்று. எனவே மைதானத்திற்கு வெளியே இருந்த நான் உள்ளே வந்தேன். வரும் பொழுது அங்கே மிகப்பெரிய ஆச்சரியம் ஒன்று நடந்தது. படுத்த படுக்கையாக தூக்கிக் கொண்டு வந்த ஒரு நபரை சகோதரன் பார்த்து "இயேசுவின் நாமத்தில் எழுந்து நட" என்று கூறினார். என்ன ஆச்சரியம்! பல வருடங்கள் நடக்க முடியாத அந்த மனிதர் உடனே எழும்பி மேடைக்கு போனார். நான் இதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டேன். இப்படிப்பட்ட இயேசுவையா நான் வெறுத்தேன், தூஷித்தேன் என்பதை நினைத்து மனங்கலங்கினேன். இயேசுவின் தெய்வீக அன்பு சகோதரன் செய்தியின் மூலமாக என்னை தொட்டது. அந்த நேரமே தேவனுக்கு என்னை ஒப்புக் கொடுத்தேன். இப்பொழுது நான் ஒரு தலைமை போதகராக இருக்கிறேன். இரண்டு சபைகளை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

ஆம், இயேசுகிறிஸ்து தம்மை பகைக்கிறவர்களையும் தம் அன்பால் அரவணைக்கிறார் என்பது எனக்கு மகிழ்ச்சியளித்தது. இதுபோன்ற இரண்டு மாபெரும் அற்புதத்தை எங்கேயுமே நான் கண்டதில்லை. இந்த அற்புதங்கள் இயற்கையை கட்டுப்படுத்தும் வல்லமை என்னை இயேசுவின்பால் கவர்ந்தது. இயேசுவின் சிலுவையின் அன்பு என்னை தொட்டது. என் பாவங்களை அறிக்கையிட்டேன். அவர் என்பாவங்களை மன்னித்து என் மீது இரக்கம் பாராட்டினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Pr. ஜான் முருகேசன், சேலம்**




## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

# அன்பரின் ஊழியம்

மலர் : 7 ◆ மே 2021 ◆ இதழ் 5




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகின்றேன்.

உங்கள் அனைவரையும் நினைத்து ஒவ்வொரு நாளும் நாங்கள் ஜெபிக்கிறோம். குறிப்பாக தேவன் தாமே உங்கள் அனைவருக்கும் நல்ல சுகத்தை கொடுக்கும்படியாக மன்றாடுகிறோம். **கடந்த காலங்களில் உங்களில் அநேகர் கொரோனா வியாதியால் பாதிக்கப்பட்டு மிகுந்த உபத்திரவங்களை கடந்து சென்றீர்கள். உங்களை நினைத்து ஒவ்வொரு நாளும் நாங்கள் கண்ணீரோடு ஜெபித்தோம். தேவன் நம்முடைய ஜெபத்தை கேட்டு உங்களில் அநேகருக்கு நல்ல சுகத்தை கொடுத்திருக்கிறார். அதற்காக அவரை துதிப்போம்!** தொடர்ந்து அவருடைய சுகமளிக்கும் கரங்கள் உங்கள் மீது இருக்கவும், உங்களை பாதுகாக்கவும் ஜெபிக்கிறோம். அவர் நிச்சயம் உங்களை கைவிடவே மாட்டார்.

கடந்த வருடத்திலும் இந்த வருடத்திலும் என்றைக்கும் இல்லாத அளவு அநேக மரணங்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவைகளின் மத்தியிலும் தேவன் நம்மை ஜீவனோடு வைத்திருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய கிருபை. அதோடுகூட அவர் நம்மை கொண்டு நிறைவேற்ற வேண்டிய நோக்கம் ஒன்று இருக்கிறது. அதை நினைத்து ஆண்டவரை துதிப்போம். அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற முனைந்து நிற்போம்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட பொழுது பகலில் அவர்களை வழி நடத்த மேகஸ்தம்பமும், இரவில் அவர்களுக்கு வெளிச்சத்தை காட்ட அக்கினி ஸ்தம்பத்தையும் கட்டளையிட்ட தேவன் இன்று உங்களோடு கூட இருந்து உங்களை நடத்த வேண்டுமென்று வேண்டுகிறோம். உங்கள் எல்லா பிரயாசங்களிலும் கர்த்தர் உங்களை வர்த்திக்கப் பண்ணுவார். கல்லூரி தேர்வுகளை எழுதுகிற மாணவ, மாணவர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தை கொடுத்து வழி நடத்த ஜெபிக்கிறோம்.

இந்த பத்திரிக்கை உங்கள் கைகளில் இருக்கும்பொழுது நம்முடைய தமிழக தேர்தல் முடிவும் வெளி யாகிக் கொண்டிருக்கும். புதிதாக


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: (0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24 மணி நேரமும்)

Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205

e-mail: info@mojindia.org website: www.mojworld.org & www.ministryofjesus.in

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

பொறுப் பேற்கிற முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தேவனுடைய ஞானத்தால் நிரப்பபட ஜெபிப்போம்.

**வேலையில்லாத அனைத்து மக்களுக்கும் தேவன் வேலை வாய்ப்பை ஏற்படுத்த நாங்கள் ஒவ்வொரு நாளும் கண்ணீரோடு ஜெபிக்கிறோம். உங்களில், உங்கள் உறவினர்களில் யாராகிலும் வேலை தேடுகிறவர்கள் இருப்பார்கள் என்றால் அவர்கள் தங்களுடைய விவரங்களை எங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். நல்ல ஊதியத்தோடு கூட வேலை கொடுக்கப்படும்.**

**இந்த மாதத்தில் விசேஷமாக நம்முடைய அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் பராமரிப்பு பணிகள் ஆரம்பிக்கப் பட ஜெபியுங்கள். உங்களில் அநேகர் இதற்கு உதவி செய்துள்ளீர்கள், செய்து கொண்டும் இருக்கிறீர்கள். தொடர்ந்து உங்களால் இயன்ற அளவிற்கு பராமரிப்பு பணிகளுக்கு என்று கொடுங்கள்.** தேவன் உங்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக. ஊழியத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற எல்லா Live மற்றும் Zoom நிகழ்ச்சிகளில் பங்குபெறுங்கள். சமூக ஊடகங்களில் வெளிவரும் அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்க்க தவறாதீர்கள்.

நமது S J Saves Trust மூலம் ஏப்ரல் மாதம் சேலம் மாவட்டம் பெருமாள்பாளையம், பெருமாள்புரம், நாட்டமங்களம், இந்திரா நகர் மற்றும் பத்தாங்கல்மேடு ஆகிய பகுதிகளில் உள்ள 350 மாணவ, மாணவிகளுக்கு நல்ல உணவு கொடுத்தோம்.

நமது கிராமப்புற மருத்துவமனைக் காகவும் உங்கள் ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஊழியத்திற்காக ஜெபிக்க விரும்புவோர் அல்லது இங்கு வந்து ஜெபிக்க விரும்புவோர் எங்களை தொடர்புகொள்ளுங்கள். அப்படி விரும்புவோர் கண்டிப்பாக உங்கள் குடும்பத்தினரின் அனுமதி மற்றும் ஒத்துழைப் போடு தான் வர வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம். இக்கட்டான இந்த சூழ்நிலைகளில் தேவன் உங்கள் தேவைகளை சந்தித்து உங்களை ஆசீர்வதித்து வனாந்தரங்கள் வயல் வெளியாகும்படி செய்வார்.

**கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ள தாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்**

**- ஏசாயா 58:11**

நம் ஊழியத்தின் மூலமாய் செய்யப்படுகிற எல்லா ஊழியங்களையும் கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதிக்க இன்னும் பல புதிய காரியங்களை செய்யவும் ஊக்கமாய் ஜெபியுங்கள். குறிப்பாக சுவிசேஷ வாசல்கள் நம் பாரத தேசத்தில் திறக்கப்பட ஜெபியுங்கள். எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் அன்பை நாம் பிரதிபலிக்கிறவர்

## தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

**Dr. ஆனந்த ஸ்திரா** மற்றும் அவர்கள் குடும்பத்தினரை
சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள்
கீழ்க்கண்ட அலைபேசியில் முன் அனுமதி பெற்று வருமாறு
கேட்டுக் கொள்கின்றோம்.

செல் : **80987 42638 & 94888 45627**

களாக இருப்போம்.

நம்முடைய பத்திரிக்கை e-magazine வடிவில் வலைதளத்திலும் உண்டு. உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுக்கு சொல்லி அதை படித்து அறிந்துகொள்ள சொல்லுங்கள். தேவன் தாமே உங்கள் அனைவரோடுங்கூட இருந்து ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

**இம்மாத வாக்குத்தத்தம்**

**சங்கீதம் 102:19, 20**
**கொலோசேயர் 2:15**
**ஏசாயா 11:2**
**1பேதுரு 3:12**

## இதயம் தொட்ட எண்ணம்

**தன்னலமான நீடித்த ஆயுளை காட்டிலும்**
**தேவ ராஜ்ஜியத்திற்கென வாழும் அற்ப ஆயுளே மேன்மை.**

**A brief Kingdom - centered**
**life is better than a long self-centered one.**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. 10848469699 | Account No. 10848559426 | Account No. 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87059 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code - ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87059 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# தேவனோடு நெருங்க வைக்கும் பரிசுத்த ஆவியானவர்

தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

பிரியமான சகோதர, சகோதரிகளே

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அதிவேகமான உலகில் நடக்கும் அநேக நிகழ்வுகளுக்கு ஒத்தாசை செய்யவும், உதவி செய்யவும் தனியாக தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. உதாரணமாக ஒரு வங்கிக்கு நாம் செல்லும் பொழுது அந்த வங்கியில் நாம் தொடர்ந்து கணக்கு வைத்திருக்கவும் மற்றும் முக்கியமான வாடிக்கையாளராக இருப்பதற்கும் வங்கியின் சார்பிலிருந்து அநேக முயற்சிகளை எடுப்பார்கள். அப்படி முக்கியமான வாடிக்கையாளர்களை கவனிப்பதற்காகவே சில நபர்களை பணியில் வைத்திருப்பார்கள். அப்படி பணியில் அமர்த்தப் படுபவர்களின் பெயர் தான் உறவு மேலாளர்கள் (Relationship Managers). இந்த உறவு மேலாளர்கள் வங்கிக்கும் வாடிக்கையாளர் களுக்கும் இடையில் மிக முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றார்கள். இவர்களை போலத்தான் நமக்கு ஈவாக கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரும். இவர் நமக்கும், தேவனுக்கும் இடையே உறவு மேலாளராக இருக்கிறார். அது எப்படி என்று நீங்கள் யோசிக்கலாம்.

தேவன் நம்மை படைத்த பொழுது நாம் எப்பொழுதுமே அவரோடுகூட ஒரு நல்ல ஐக்கியத்தை வைத்திருக்க வேண்டும் என்றே விரும்பினார். மனிதன் செய்த பாவமே அந்த ஐக்கியத்தை குலைத்து போட்டது. **இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் அந்த ஐக்கியம் சீர்படுத்தப்பட்டது. அவர் ஊழியம் செய்து இந்த உலகை விட்டு எடுக்கப்படும் நாட்களில் தம்முடைய சீஷர்களுக்கு என்று ஒரு பரிசை அளித்தார். அந்த பரிசு தான் பரிசுத்த ஆவியானவர். (யோவான் 14:7)** இயேசு சொன்னபடியே பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய தேற்றரவாளன். அந்த திரியேக தேவனை வணங்குகிற நாம் இயேசுவை மாத்திரம் நினைத்துக்கொண்டு பரிசுத்த ஆவியானவரை மட்டுப்படுத்திவிட முடியாது. பரிசுத்த ஆவியானவரின்றி நாம் ஒரு வல்லமையான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழவே முடியாது. அவர் இன்றி தேவனோடு நெருங்கி ஜீவிக்க இயலாது. **அவர் நம்முடைய பெலவீனங்களில் நம்மைத் தாங்குவதோடுகூட நமக்கும் தேவனுக்கும் இடையே இருக்கிற உறவை மேம்படுத்துகிறவராக இருக்கிறார். அவர் நம்முடைய வழிகாட்டி,**

**யோவான் 16 : 13 முதல் 15 வரை** நாம் பார்க்கிறபடி பிதாவினுடையவைகளில் இருந்து எடுத்து நமக்கு அவர் அறிவிக்கிறவராய் இருக்கிறார். தீமையான உலகில் வாழும் நம்மை பரிசுத்தமான தேவனோடு கூட நெருங்கி உறவு வைத்துக்கொள்ள உதவுகிறார். இது சாத்தியமா? இது முடியுமா? என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயமாக முடியும்

**ஆதியாகமம் 5:24** சொல்கிறது **"ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான்!" ஆதி. 6:9** கூறுகிறது **"நோவா தேவனோடு சஞ்சரித்தான். ஆபிரகாம் தேவனோடு சிநேகிதனை போல பேசினான். மோசே தேவனை முகமுகமாய் தரிசித்தான்".** இது இந்த காலத்திலும் சாத்தியமா? ஆம் முடியும். கடவுள், கர்த்தர், தேவன் என்று சொல்லும் பொழுது மதத்தின் அடிப்படையிலேயே அநேகர்

நினைக்கிறார்கள். **மதம் என்பது மனிதனால் உண்டாக்கப்பட்டது. மதம் நமக்கும் தேவனுக்கும் இடையே ஓர் சட்ட விவாத அடிப்படையிலான உறவை ஏற்படுத்தி கொடுக்கின்றது. (Legalstic approach)** இப்படிப்பட்ட ஒரு உறவு குறைந்த நாட்களிலேயே கசந்துவிடும் அல்லது அர்த்தமற்ற ஒரு உறவாக இருந்துவிடும். நம்முடைய வேதாகமமோ சட்ட விவாத அடிப்படையில் நமக்கு ஒரு உறவு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. மாறாக நமக்கும் தேவனுக்கும் உணர்வுப்பூர்வமான உறவையே ஏற்படுத்தி கொடுத்திருக்கிறது. **இந்த உணர்வுப்பூர்வமான உறவை இன்னும் சுவாரஸ்யம் ஆக்கவும் இன்னும் நெருக்க மாகவும், அன்புள்ளதாக்கவுமே பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகின்றார்.** உணர்வுப் பூர்வமான ஒரு உறவையே தேவன் எதிர்பார்க் கிறார். கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தோம், பரலோகத்திற்கு சென்றோம் என்கின்ற உறவை அவர் விரும்புவதே இல்லை. பரிசேயர்கள் அப்படிப்பட்ட உறவை தான் வைத்திருந்தார்கள். தேவன் அதை வெறுத்தார். உங்கள் பலிகளையும், காணிக்கைகளையும் நான் வெறுக்கிறேன் என்று சொன்னார். ஆகவே தான் இயேசுகிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் அடிப்படையில் அல்லாமல் கிருபையின் அடிப்படையில் நம்மை மீட்டுக் கொண்டு நமக்கும் தேவனுக்கும் இடையே மேலாளர், பணியாளர்கள் என்கின்ற உறவை வைக்காமல் தகப்பன், பிள்ளை, மணவாளன், மணவாட்டி என்கின்ற உறவை ஏற்படுத்தி கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் இந்த உறவை இன்னும் மேம்படுத்தி நெருக்கமான ஒரு உறவை நாம் தேவனோடு வைத்துக்கொள்ள உதவி செய்கிறார். அவர் எப்படி உதவி செய்கிறார் என்பதை இச்செய்தியில் நாம் பார்ப்போம்.

## தேவ பிரசன்னத்திற்காய் ஏங்கவும், கேட்கவும் வைக்கிறவர் பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும் பொழுது நாம் தேவாதி தேவனை நோக்கும் பார்வையே மாற்றப்படுகிறது. ஏதோ ஒரு தூரத்தில் உள்ள வல்லமையுடைய ஒரு சக்தியாக தேவனை பார்ப்பதை காட்டிலும் **கலாத்தியர் 6:4** மற்றும் **ரோமர் 8:15ல்** நாம் பார்க்கிறபடி **தேவனை நம்முடைய தகப்பனாய் பார்க்கும்படி** அவர் விரும்புகிறார். நாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்கும்பொழுது இயல்பாகவே அவர் பிரசன்னத்தை தேடுவோம். எப்படி ஒரு சிறு குழந்தை பெற்றோரை தேடுகிறதோ அதே போல நாமும் நம்முடைய தகப்பனாகிய தேவனுடைய பிரசன்னத்தை தேடுவோம். அவர் இல்லாமல் நம்மால் இருக்க முடியாது. ஒரு குமாரனை போல குமாரத்தியை போல உரிமையோடுகூட அவரோடு பழகுவோம்.

**ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம் - எபி. 4 : 16**

மணவாட்டி தன் மணவாளனை உரிமை யோடு தேடுகிறது போல நாமும் தேவாதி தேவனை ஏக்கத்தோடு தேடுவோம். **உபாகமம் 3 :1 முதல் 4** வசனங்களில் நாம் பார்க்கிறபடி அவரை தேடி திரிந்து அவரை விடாமல் பற்றிக்கொள்வோம். அது மிக மிக அருமையான உணர்வு. தேவனை பார்க்க, அவரோடு பேச அவர் சத்தம் கேட்க நாம் ஏங்கும் பொழுது அவர் நமக்கு நிச்சயம் தென்படுவார். ஆதாம் அவர் பிரசன்னத்தை ருசித்தவனாய் இருந்தபடியால் தான் பாவம் செய்து அவரைவிட்டு விலகின பொழுது ஓடி ஒளிந்து கொண்டான். தாவீது அவருடைய பிரசன்னத்திற்காய் ஏங்கி தவிக்கிறான் **(சங்கீதம் 16:11; 21:6; 51:11; 84:2,10).** அவர் பிரச்சனத்தின் சந்தோஷத்தாலும் திருப்தியாகிறான். பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையால் தான் தாவீது தேவனுடைய பிரசன்னத்தை அதிகமாய் உணர்ந்து அவருடைய பிரசன்னத்தில் மகிழ்ந்து களிகூர முடிந்தது.

பிரியமானவர்களே! தேவ பிரசன்னம் மிக அருமையானது, உன்னதமானது. அவருடைய பிரசன்னத்தில் மகிழ்ச்சி உண்டு, சமாதானம் உண்டு, விடுதலை உண்டு. அவருடைய பிரசன்னத்தில் நாம் களிகூர ஆரம்பித்துவிட்டால் நிச்சயமாக நாம் உலகில் யாரையும், எதையும் தேடவே மாட்டோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவனை தேட தேவலாயத்திற்கோ அல்லது தேவ ஊழியர்கள் இருந்த இடத்திற்கோ தான் செல்ல

வேண்டும். ஆனால் **நாம் வாழுகின்ற கிருபையின் காலத்திலே பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருப்பதால் நாம் ஒவ்வொருவரும் அவருடைய பிரசன்னத்தை சுமந்து செல்கிறவர்களாக இருக்கிறோம். (The Holy Spirit makes us carriers of God's presence) நாம் எங்கிருந்தாலும் அவர் நம்மோடுகூட இருக்கிறார்.** அவர் நமக்குள் இருக்கிறார். எல்லா சூழ்நிலைகளிலும் நாம் குட்டி பரலோகத்தை நம்மோடுகூட சுமந்து கொண்டிருக்கிறோம். **அப்போஸ்தலர் 7:54-60** வசனங்களில் பார்க்கும் பொழுது **"ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றார்கள், மரிக்கும் தருவாயிலும் ஸ்தேவான் பரிசுத்த ஆவியினாலே நிறைந்த வராய் பரலோகம் திறக்கப்பட்டிருப்பதை காண்கிறான்".**

ஆம் பிரியமானவர்களே! நீங்கள் எந்த பாடுகளை சந்தித்தாலும், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருக்கும் பொழுது தேவ பிரசன்னத்திலிருந்து நீங்கள் விலகிச் செல்லவே முடியாது. **தேவ பிரசன்னமே உங்களுக்கு கிடைத்திருக்கிற மகா பெரிய சொத்து. விலைமதிக்க முடியாத ஒரு சந்தோஷம்.** பரிசுத்த ஆவியானவர் இந்த அனுபவங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி செய்யட்டும்.

## பரிசுத்த ஆவியானவர் தேவனோடு பேசவும், அவர் சத்தம் கேட்கவும் நமக்கு உதவுகிறார்!

ஒருவருடைய பிரசன்னத்தில் இருப்பது வேறு, அவரோடு பேசி மகிழ்வது வேறு. தேவ பிரசன்னத்தில் நாம் பயபக்தியோடு அவரை வணங்கலாம். ஆனால் அவரோடுகூட பேசி பழகுவதற்கு மிகுந்த தைரியமும், உரிமையும் வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்கு அந்த தைரியத்தையும், உரிமையையும் கொடுக்கிறார். நாம் காது கேளாத அல்லது பார்க்காத தேவனை தேடவில்லை, வணங்கவில்லை. மாறாக நம்மோடு கூட பேசுகிற, இடைபடுகிற தேவனையே வணங்கு கிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவனோடுகூட நாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கவும், தரிசனங்களாலும், சொப்பனங்களாலும் மற்ற பலவித வழிகளிலும் அவரோடு நெருங்கி பழகவும் உதவி செய்கிறார். **யாத்திராகமம் 20:18,19** வசனங்களை நாம் வாசிக்கும் பொழுது அங்கே, **சீனாய் மலையிலே தேவன் பயங்கரமாக, வல்லமையாக இறங்குகிறதை பார்க்கிறோம். இதைக் கண்டு ஜனங்கள் பயந்து தேவன் எங்களோடு பேசாதிருப்பாராக. பேசினால் நாங்கள் செத்துவிடுவோம் என்கிறார்கள்.** மோசேயைப் பார்த்து நீர் தேவனோடு பேசும் நாங்கள் உம்மிடத்தில் கேட்டுக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்பொழுதோ நமக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டு இருப்பதின் நிமித்தம் நாம் தேவனை கண்டு பயந்து அஞ்ச வேண்டிய அவசியமில்லை. ஆபிரகாமை போல, மோசேயை போல நாம் அவரோடுகூட பேச முடியும். வேதாகமத்தில் நாம் காணும் தேவ மனிதர்கள் தேவனோடுகூட பேச மாத்திரம் செய்யவில்லை. அவரோடு வாதாடினார்கள், சில சமயங்களில் போராடினார்கள். ஆனால் எல்லாவற்றிலும் தேவன் அவர்களுடைய வார்த்தையை கேட்டார்.

- **ஆபிரகாம் சொல்வதை கேட்பேன் என்றார்**
- **மோசே சொன்னதை கேட்டார்!**
- **யோசுவா சொன்னதை செய்தார்!**
- **தாவீது சொன்னதை செய்தார்!**

அதேபோல இன்றைக்கும் நீங்கள் சொல்வதை அவர் கேட்பார். இது தான் பரிசுத்த ஆவியான வருடைய ஒத்தாசை, மகிமை. **ரோமர் 8:26ல்** நாம் பார்க்கிறபடி **அவர் தேவனுக்கும் நமக்கும் இடையே ஒரு நெருக்கத்தை உண்டு பண்ணு கிறார். 1 யோவான் 3:24** சொல்கிறது போல **தேவன் நம்மோடுகூட இருக்கிறதையும் அவர் நாம் சொல்வதை கேட்கிறதையும், நாம் அவரோடுகூட பேசுகிறதையும் நாம் எப்படி தெரிந்து கொள்ள முடியும்?** பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருப்பதால் தான் தானே. **யோபு 22:21** சொல்கிறது போல, **தேவனோடு**

**பேசி பழகுவோம் அப்பொழுது அவர் நம்மோடுகூட பேசுவார்.**

பரிசுத்த ஆவியானவர் பேதுருவிற்கு பல ஆலோசனைகளை வழங்கினார். பவுலிற்கு ஆலோசனைகளை வழங்கினார். அவர் நமக்குள் இருக்கும் பொழுது தேவனை இன்னும் அதிகமாய் அறிந்துகொள்வதற்கான அறிவை நமக்குக் கொடுக்கிறார் **(எபேசியர் 1:17).** ஏனெனில், ஆவியானவர் தேவனுக்குரிய எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார் **(1கொரி. 2:10,11).** ஒருவரோடு நாம் உறவு வைத்திருக்கும் பொழுது அவரைப் பற்றி அதிகமாய் தெரியாத பட்சத்தில், அறிந்துகொள்ளாத பட்சத்தில் நாம் அவர்களோடுகூட அதிகமான நெருக்கத்தை வைத்துக்கொள்ள முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும்பொழுது நாம் தேவனை பற்றி அதிகமதிகமாய் அறிந்துகொள்வது மட்டுமல்லாமல், அவரோடுகூட இன்னும் அதிக மதிகமாய் பேசவும், உறவாடவும் முடிகின்றது. ஒரு உறவில் சரியான பேச்சுவார்த்தை இல்லாத பொழுது அந்த உறவில் விரிசல் ஏற்படும். அதேபோலத் தான் நமக்கும் தேவனுக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்றால் அங்கே மிகப்பெரிய ஒரு விரிசல் உண்டாகிறது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருப்பதால் நமக்கும் தேவனுக்கும் இடையேயான உறவை அவர் ஜீவனோடு வைத்திருக்கிறார். அந்த உறவு செத்துப் போவதில்லை.

சவுல் ராஜா இப்படிப்பட்ட ஒரு உறவை தேவனோடு ஏற்படுத்திக்கொள்ளவில்லை. தாவீதோ ஆண்டவரோடுகூட ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டான். எல்லா வற்றையும் குறித்தும் தேவனோடு பேசினான். சங்கீதங்களை படிக்கும் பொழுது அவன் தேவ னோடு பேசுவதை நன்கு அறிந்து கொள்ளலாம். சில சமயங்களில் அவரிடத்தில் புலம்புவான். சில சமயங்களில் கோபமாய் சத்தமிடுவான். சில சமயங்களில் கெஞ்சுவான், துதிப்பான், நன்றி செலுத்துவான், போற்றுவான். என்ன ஒரு அருமையான நெருக்கம். அந்த நெருக்கம் நமக்கும் தேவனுக்கும் இருக்கும் பொழுது நிச்சயமாகவே நாம் கொஞ்சம் கூட சோர்ந்து போவதில்லை.

அன்பானவர்களே நீங்கள் தேவனோடு பேசுகிறீர்களா? பரிசுத்த ஆவியானவர் உங்களை அப்படி வழி நடத்த சொல்லி அவருக்கு இடம் கொடுக்கிறீர்களா?

பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாடுங்கள்! அப்பொழுது நீங்களும் தேவனோடுகூட பேசி மகிழ்ந்திருக்க முடியும்.

**பரிசுத்த ஆவியானவர் நாம் தேவனை புரிந்து கொள்ளவும், அவருக்கு கீழ்ப்படிந்து நடக்கவும் உதவி செய்கிறார்.**

ஒரு உறவின் அடுத்த கட்டம், நாம் யாரோடு உறவு கொண்டிருக்கிறோமோ அவர்களுடைய வார்த்தைகளை கேட்டு கீழ்ப்படிந்து நடப்பதே. ஒருவேளை சூழ்நிலைகள் சாதகமானால் கீழ்ப் படிந்திருக்கலாம். தேவனே இல்லை என்கின்றதான சூழலில் உலகத்தில் நாம் வாழும்பொழுது நாம் எப்படி அவருக்கு கீழ்ப்படிந்து நடக்க முடியும்? அது கடினம் தானே, தேவனை நாம் கண்முன் பார்ப்பதில்லையே. நம்மால் செய்ய முடியாத ஒரு காரியத்தை அவர் செய்யும் பொழுது நாம் எப்படி அவருக்கு கீழ்ப்படிய முடியும் என்று நீங்கள் கேட்கலாம். இந்த சூழ்நிலைகளில் தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருந்து தேவனுக்கு நாம் கீழ்ப்படியும்படியாக ஏவுகிறார், நடத்துகிறார். தேவனுடைய பார்வை நமக்குள் வருகின்றது. தேவனுடைய எண்ணங்களையும், கட்டளை களையும் மாம்சப்பிரகாரமாக நாம் புரிந்து கொள்ளும்படியாக பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். தேவ சிந்தை நமக்குள் ஏற்படும் படியாக நமக்கு வழியை உண்டு பண்ணுகிறார். **(1கொரி. 2:15; ரோமர் 8:6,9).** பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும் பொழுது நம்மையும் அறியாமல் தேவனுடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கின்றோம். ஏனென்றால் அவர் நமக்கு எல்லாவற்றையும் போதித்து நடத்துகிறவர். **யோவான் 16:13; 14:26; யோவான் 16:8ல்** நாம் பார்க்கிறது போல **"அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறவர்"** நியாயப்பிரமாணம் நாம் காணக்கூடிய, படிக்கக் கூடிய ஒரு கட்டளை புத்தகம். ஆனால் **பரிசுத்த ஆவியானவரோ**

**நமக்குள்ளேயே வாசம் பண்ணும் ஒரு செய்முறை கையேடு (Manual)** ஒரு கம்ப்யூட்டரை போல அல்லது இயந்திர மனிதனை (Robot) போல பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவனுடைய பாதைகளில் நடத்த பழக்குவிக்கிறார், திட்டம் பண்ணுகிறார். (The Holy Spirit programmes us to abide by God's commandments) கீழ்ப்படிதல் இல்லாமல், இருக்கவும், நாம் தவறு செய்யவும் பரிசுத்த ஆவியானவர் நம்மை அனுமதிப்பதில்லை. அவரே நமக்குரிய வேலியாக அமைந்துவிடுகிறார். நம்மை கண்டிக்கும் உபாத்தியராக இருக்கிறார். **1 பேதுரு 1:22ல்** நாம் பார்க்கிறபடி **பரிசுத்த ஆவியானவரால் நாம் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க முடியும்.** கீழ்ப்படிதல் என்று சொல்லும்பொழுது ஏதோ நன்மைக்காக கீழ்ப்படிதல் அல்ல. மரணமே வந்தாலும் தேவனுக்கு கீழ்ப்படிவதாகும்.

நோவா எவ்வளவோ போராட்டங்கள், எதிர்ப்புகளின் மத்தியிலும் தேவன் தனக்கு கட்டளையிட்டபடி பேழையை செய்து முடித்தான் **(ஆதி. 6:22)** சீனாய் மலையிலே மோசேயிடம் தேவன் ஆசரிப்பு கூடாரத்தை பற்றியும் அதோடு செய்ய வேண்டிய அனைத்து காரியங்களை குறித்தும் கற்பித்து கொடுத்தார்.

மலையிலிருந்து அவன் இறங்கினவுடன் பெசலெயேல் என்கின்றதான மனிதனிடமும், அவனோடு சேர்ந்த சிலரிடமும் இதை எல்லாவற்றையும் செய்யக் கூடிய பொறுப்பு கொடுக்கப்பட்டது. மோசே ஒருவனால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. ஆனால் மோசே எப்படி தேவன் தன்னிடத்தில் சொன்னதை பெசலெயேலுக்கு தெளிவுபடுத்த முடியும். அங்கே தான் பரிசுத்த ஆவியானவர் மிகப்பெரிய ஒரு பங்கை வகிக்கிறார். மோசேக்கு தேவன் சொன்ன அனைத்தையும், பெசலெயேலிடம் தெளிவாக எடுத்து சொல்லி அதின்படியே செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் ஒரு ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார். பெசலெயேல் தேவனோடு நேரடியாக பேச வில்லை. மோசே ஒரு மனிதன் தான் அவன் என்ன தான் தேவனுடைய மனிதனாக இருந்தாலும் தேவ கட்டளை அனைத்தையும் நூறு சதவிகிதம் என்ன தேவை என்று பெசலெயேலுக்கு விவரித்திருக்கவே முடியாது. ஆனால் அவன் விவரித்த அனைத்தையும் ஒருங்கிணைத்து பெசலெயேலுடைய மனதில் அதை தேவன் கட்டளையிட்டபடி எல்லாம் செய்யும்படி ஒத்தாசை செய்தவர் பரிசுத்த ஆவியானவர். **(யாத்திராகமம் 32:1-6; 35:30,33; 39: 42,43).**

ஆம் பிரியமானவர்களே! சங்கீதம் 143:10ல் நாம் பார்க்கிறபடி **"உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியில் நடத்துவாராக"** என்று ஒவ்வொரு நாளும் தேவனை நோக்கி கேளுங்கள். **எபேசியர் 4:30; 5:19ல்** நாம் காண்கிறபடி பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள். ஆவியின் அனலை அவித்துப் போடாதிருங்கள். சவுல் ராஜாவை போல கீழ்ப்படியாமல் இருக்காதீர்கள். கீழ்ப்படிதலுக்கு ஒரு தியாகம் தேவை. கீழ்ப்படிதல் சில சமயங்களில் வேதனையானதாக இருக்கலாம். சில சமயங்களில் இயலாததாய் இருக்கலாம். ஆனால், கீழ்ப்படிதல் முழுமையானதாக இருக்க வேண்டும். இதையெல்லாம் உங்களால் செய்ய முடியுமா?

சவுல் ராஜா சாமுவேல் தீர்க்கதரிசிக்காக கொஞ்சம் கூட காத்திருக்கவில்லை. மனுஷீகமாக யோசித்தான், அவனுடைய அகங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தான். அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருந்தும் கூட அவரின் வார்த்தைக்கு அவன் செவி கொடுக்கவில்லை.

தாவீதோ அதற்கு நேர்எதிராக தேவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து நடந்தான். எனவே உயர்த்தப்பட்டான், உன்னத நிலைக்கு கொண்டு செல்லப்பட்டான். இந்த பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளும் இன்று இருக்கிறார். அவருடைய வார்த்தைக்கு செவி கொடுங்கள். பரிசுத்த ஆவியானவரின் நிறைவால் நிரப்பப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள். **பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும்பொழுது அவருடைய வரங்கள் செயலாற்ற வேண்டும் என்று நாம் எவ்வளவு விரும்புகின்றோமோ அதற்கும் அதிகமாக பரிசுத்த ஆவியானவர் உதவியோடு நாம் தேவனோடு நெருங்கி ஜீவிக்க வேண்டும் என்ற ஏக்கம் நமக்குள்ளே இருக்க வேண்டும்.** நீங்கள் அந்த ஏக்கத்தை உடையவர்களாய் இருக்கும் பொழுது அவர் உங்களோடுகூட பேசுவார், நடத்துவார். தேவனுக்கும், உங்களுக்கும் இடையே நெருக்கமான, பிரியாத ஒரு உறவை ஏற்படுத்தித் தருவார்.

# ஜீவனுள்ள தேவனிடமிருந்து அற்புதங்களை பெற்ற பங்காளர்களின் சாட்சிகள்

## 35 லட்சம் கடன் தீர வழிவாசல் திறந்த மகா அற்புதர்!



முப்பத்தி ஐந்து லட்சம் ரூபாய் கடன் பிரச்சனையினால் மிகுந்த வேதனையை அனுபவித்து வந்தேன். எனது தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதினால் இவ்வளவு கடன் உண்டானது. ஒவ்வொரு நாளும் கண்ணீரில் நாட்களை கடத்தி வந்தோம். கடனை நினைத்தால் எனக்கு தூக்கமே வராது. இந்நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கூட்ட முடிவில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனது பிரச்சனையை கரிசனையோடு கேட்டறிந்து தனது கையிலிருந்த Rs.500/-ஐ கொடுத்து இந்த பணத்தை கர்த்தர் ஆசீர்வதித்து மலை போன்றுள்ள உங்கள் கடன் பிரச்சனையை தீர்க்க வாசலை திறப்பார் என்று கூறி கண்ணீரோடு எனக்காக ஜெபித்தார்கள். நம்பிக்கையோடு எனது வீட்டிற்கு சென்றேன். அதன்பிறகு எனது தொழிலை கர்த்தர் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். எனது கடன் தொகை சிறிது சிறிதாக அடைத்து தீருமளவிற்கு கர்த்தர் மாபெரும் அற்புதம் செய்தார். இதை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன். எனது பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியப் பணிகளுக்கு தருகின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திரு. சுரேஷ், மார்த்தாண்டம்

## நல்ல வேலை மகனுக்கு கிடைத்தது

எனது மகன் வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப் பட்டு வந்தான். இந்நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டு Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் மகனுக்காக ஜெபித்தேன். பாஸ்டர் அவர்கள் ஜெபித்து "மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்வார்" என்று கூறினார்கள். அவர்கள் கூறியது போலவே வெளி நாட்டில் நல்லதொரு கம்பெனியில் மகனுக்கு அடுத்த சில மாதத்தில் வேலை கிடைக்கும்படி அற்புதத்தின் தேவன் அதிசயம் செய்தார். கர்த்தர் செய்த நன்மைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!



- Sis. ஜாய், நாகர்கோவில்

## 17 ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம் அருளின அற்புதர்



எங்களுக்கு திருமணமாகி 17 ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் சொல்லொண்ணா வேதனையை அனுபவித்து வந்தோம். மருத்துவ முயற்சிகளை மேற்கொண்டும் யாதொரு பயனுமில்லை. உறவினர்களின் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சினால் அவமானங்களை சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டு Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அடுத்த ஆண்டில் அழகிய குழந்தை எங்களுக்கு பிறக்கும்படி அதிசயத்தின் தேவன் அற்புதம் செய்து எங்களை சந்தோஷப்படுத்தினார். நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திரு. ஜான் கிறிஸ்டோபர், நாகர்கோவில்

## பதவி உயர்வு அருளின அதிசயர்

நான் அரசுத் துறையில் பணியாற்றி வருகிறேன். எனது பதவி உயர்விற்காக ஜெபித்து வந்தேன். அன்பரின் ஊழிய பத்திரிக்கையில் சாட்சிப் பகுதிகள் படித்தேன். எனக்கும் கர்த்தர் பதவி உயர்வு

கொடுத்தால் நான் சாட்சி கடிதம் எழுதி அனுப்புவேன் என்று பொருத்தனை செய்தேன். **கர்த்தர் எனக்கு உதவியாளர் பணியிலிருந்து மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு கொடுத்துள்ளார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஊழியப் பணிகளுக்கு பொருத்தனை காணிக்கை அனுப்பியுள்ளேன்.

- பொன்மணி, கோயபுத்தூர்

## புயல் வெள்ளத்திலிருந்து அற்புதமாக பாதுகாத்த மகிமையின் தேவன்!

எனது மூன்றாவதுமகள் அமெரிக்கா ப்ளோரிடாவில் உள்ள ஜாக்ஸன்வில் என்ற ஊரில் சொந்தவீட்டில் இரண்டு பெண் குழந்தை, கணவர் ரகுபதியுடன் (Software Engineer) நலமுடன் வாழ்கிறார்கள். அந்த ஊரில் அடிக்கடி புயல் சீற்றம் வரும். அந்த வருடம் புயலின் போது குடும்பத்துடன் பாதுகாப்பான பகுதிக்கு சென்று விடுமாறு அரசு உத்திரவிட்டிருந்தது. காரில் அடுத்த மாநிலம் செல்ல முடியவில்லை. ஏனென்றால் அனைவரும் ஒரே நேரத்தில் சென்ற படியால் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. எனவே தங்கள் வீட்டிலேயே தங்கி விட்டார்கள். அக்டோபர் 7ந் தேதி மதியம் 12 மணியளவில் மூத்த மகள் (எனது பேத்தி) ஓவியாவிற்கு பிறந்தநாள் கேக் வெட்டிய பிறகு, கார் நிறுத்தும் இடத்தில் க்ளோசெட் போன்ற அறையில் நான்கு பேரும் குழந்தைகளுடன் தங்கிவிட்டார்கள். இதனை என் மகள் தொலைப்பேசி வாயிலாக எனக்கு தெரிவித்தவுடன் நாங்கள் மகள் குடும்பத்தை நினைத்து மிகவும் பயந்து, கலங்கினோம். உடனடியாக **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்பு கொண்டு மகளும், மருமகன் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக ஜெபிக்க கூறினோம். அவர்கள் மிகுந்தகண்ணீருடன் ஜெபித்து தீர்க்கதரிசனமாக **"நீர்த்திரள்கள் உங்கள் மகள் குடும்பத்தார் மேல் புரளுவதில்லை, கர்த்தருடைய பாதுகாப்பு பூரணமாய் இருக்கும்"** என்று கூறினார்கள். இதைக் கேட்டவுடன் ஆறுதல் அடைந்தோம். புயல் மணிக்கு 250கி.மீ. வேகத்தில் வந்ததாக மகள் கூறினாள். காற்றின் வேகத்தில் அந்த உயரமான மரங்கள் இரண்டு வீட்டின் மேல் விழுகாமல் வீட்டு மதில் சுவர் மேல் விழுந்து எந்த சேதமும் ஏற்படாமல் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தீர்க்கதரிசனமாக **"நீர்த்திரள்கள் உங்கள்மேல் புரளுவதில்லை"** என்று கூறியது போலவே வீதிகளில் வந்த வெள்ளம் மகள் வீட்டை நெருங்கவில்லை. மின்சாரமும் துண்டிக்கப் படவில்லை. கர்த்தர் பத்திரமாகப் பார்த்துக் கொண்டார். இது சகோதரர் அவர்களின் பிரார்த்தனையால் பெற்றுக்கொண்ட காரியங்களில் ஒன்று. அற்புதமாக மகள் குடும்பத்தை பாதுகாத்த சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

- திருமதி. சரஸ்வதி முத்து கோபால், தாராபுரம்

## உயர் சம்பளத்தில் நல்ல வேலை கிடைத்தது!

வேலை இழந்த என் மகனுடைய வேலைக்காக அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கூறினேன். ஜெபித்த சகோதரர் **"சங்கீதம் 37:4ன் படி இருதயத்தின் வேண்டுதல்களை அருளிச் செய்கிற தேவனின் சித்தப்படி உங்கள் மகனுக்கு பெரிய கம்பெனியில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கும்"** என்று கூறினார். கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த 19.3.2021 அன்று Synergy என்னும் கம்பெனியில் வேலை கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

- திரு. ஜெயபோஸ், சென்னை

## இரட்டிப்பான நன்மை தரும் அன்புள்ள இயேசு



2018-ஆம் ஆண்டில் விஜயவாடாவில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் கலந்து கொண்டேன். கூட்ட முடிவில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தனித்தனியாக ஒவ்வொரு வருக்கும் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அப்படி ஜெபிக்கும் பொழுதுளங்கள் அன்பு மகனையும், மகளையும் பார்த்து **"உங்கள் இருவருக்கும் அற்புதமாக MBBS படிக்க இடம் கிடைக்கும், நிச்சயமாக கர்த்தர் இதைச் செய்வார்"** என்று கூறினார். அதின்படியே என் மகன் ஸ்டீபனுக்கும், மகளுக்கும் ஒரே கல்லூரியில் MBBS படிக்க இடம் கிடைக்க அநுக்கிரகம் செய்தார். இது மாபெரும் அற்புதம். நாங்கள் செய்த பொருத்தனையை ஊழியத்திற்கு கொடுக்கிறோம்.

- திரு. சாலொமோன் தியாகராஜ், பிரகாசம் மாவட்டம்

## வாஞ்சையை நிறைவேற்றிய கர்த்தர்



நான் M.Tech., படித்து ஒரு தனியார் கல்லூரியில் பேராசிரியராக குறைந்த சம்பளத்தில் வேலை பார்த்தேன். என் குடும்பத்தை நடத்த அது போதாமல் இருந்தது. அரசாங்க பணிக்கான எல்லா தேர்வினையும் எழுதி, நேர்முகத் தேர்விற்கும் சென்று விட்டேன். எனினும் வேலை கிடைக்கவில்லை. எல்லா முயற்சியும் தோல்வி அடைந்தது. இப்படிப்பட்ட மனச்சோர்வான நேரத்தில் விஜயவாடாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டேன். தனி ஜெப நேரத்தில் என்னை முன் பின் அறியாத Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் **"மகளே! நீ கலங்காதே! அரசாங்க வேலைக்கு நீ முயற்சி எடுக்கிறாய். எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தபடியால் கவலையில் இருக்கிறாய். இப்பொழுது உனக்காக ஜெபிக்கிறேன். சீக்கிரமாய் கர்த்தர் உனக்கு அரசாங்க வேலையை கொடுப்பார்"** என்று கூறினார்கள். அதின்படியே அதே வருடம் அக்டோபர் மாதம் உயர்ந்த சம்பளத்தில் அரசாங்க வேலை கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. துளசி, விஜயவாடா**

## அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்



எனது தங்கை மிகுந்த நெஞ்சு வலியின் நிமித்தம் தீவிர சிகிச்சை பிரிவில் வைக்கப் பட்டிருந்தாள். மருத்துவர்கள் யாவருமே அவள் இறந்து விடுவாள் என்று சொன்னார்கள். இதனால் நாங்கள் மிகவும் கண்ணீர் வடித்தோம். இந்நிலையில் அன்பரின் ஊழிய வாட்ஸ் அப்பிற்கு தங்கை நிலையை எழுதி தெரியப்படுத்தினோம். அவர்களும் தங்கைக்காக ஜெபம் செய்து பதில் அனுப்பினார்கள். அந்த பதில் கிடைத்த உடனே என் சகோதரி பிழைத்துக் கொண்டாள். மரண கட்டிலிருந்துகர்த்தர் அவளை விடுவித்து சுகமாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

என்னுடைய பேரன் சுஜித் லண்டனில் உள்ள புகழ்பெற்ற Grammar School-ல் படிக்க ஆசைப் பட்டான். ஆனால் அங்கு இடம் கிடைக்கவில்லை. இடம் கிடைப்பது மிகவும் கஷ்டம். இந்நிலையில் பேரனுக்காக சகோதரர் ஜெபித்த ஜெபம் கேட்கப் பட்டு அந்த பள்ளியில் இடம் கிடைத்து படிக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். அற்புதம் செய்த தேவனை துதிக்கிறேன்.

**- Sis. புண்ணிய பாரதி, விஜயவாடா**

## கோவிட்-19 வியாதியிலிருந்து முற்றிலும் விடுவித்த கர்த்தர்



நான் கோவிட் வியாதியால் மிகவும் கஷ்டப்பட்டேன். மூச்சு விடவே முடியவில்லை. மருத்துவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் Artificial Respiration செய்தும் நான் பிழைப்பது அரிதாகி விட்டது. இறந்து போய்விடுவேன் என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். இதனால் மிகவும் கலங்கினேன். எனது உடலும் மிகவும் பெலவீனமானது. அந்த நேரத்தில் சகோதரனுடைய தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்த பொழுது எனக்குள் விசுவாசம் பெருகியது. அதின்படியே நான் மிகுந்த பெலவீனத்திலும் ஐயா அவர்களுடன் சேர்ந்து ஜெபித்தேன். மருத்துவர்களே ஆச்சரியப்படும்படியாக என் வியாதி முற்றிலும் நீங்கி சுகமாகும்படி சர்வவல்ல தேவன் இரக்கம் செய்தார். சுகம் தந்த தேவனுக்கு எங்கள் காணிக்கையை படைக்கிறோம்.

**- திரு. நவீன்குமார்**

## தீராத எல்லா வியாதியையும் குணமாக்கிய கர்த்தர்!



கடந்த ஆறு மாதமாக **எனது சரீரம் முழுவதும் பயங்கரமான சொறி, சிரங்கு ஏற்பட்டு வாட்டி வதைத்தது.** இரவும், பகலும் தூங்க முடியாமல் கஷ்டப் பட்டேன். பலவித மருத்துவ சிகிச்சைகள் எடுத்தும் பிரயோஜனமில்லை. எந்நேரமும் சரீரம் முழுவதும் அரித்துக் கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு நாளையும் கண்ணீரில் கழித்துவந்தேன். இந்நிலையில் ராஜமந்திரியில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு சகோதரரிடம் ஜெபித்துக் கொண்டேன். **ஐயா அவர்கள் என் தலையில் கை வைத்து ஜெபம் செய்யும் பொழுது பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை உணர்ந்தேன். அந்த நேரமே எனக்கிருந்த தோல் வியாதி முழுவதையும் கர்த்தர் சுட்டெரித்து விட்டார். இப்பொழுது பூரண சுகத்துடன் இருக்கிறேன்.**

எனது தந்தை மற்றும் எனது சகோதரனும் கோவிட் வியாதியால் கஷ்டப்பட்டார்கள். சகோதரனிடத்தில் ஜெபிக்கக் கேட்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அவர்களுக்கும் நல்ல சுகத்தை கொடுத்தார்.

- Sis. **பிந்துலைலா, விஜயவாடா**

## முடியாதவற்றை முடியச் செய்த கர்த்தர்



நானும் எனது கணவரும் திருமணமாகி சில மாதங்கள் கழித்து பரிசோதனைக்காக மருத்துவரிடம் சென்றோம். பிரசித்தி பெற்ற மருத்துவர்கள் என்னை பரிசோதித்து விட்டு உனது கர்ப்பப்பை இரண்டாக கிழிந்துள்ளது. அதை ஒன்றுமே செய்யமுடியாது (Septate uterus) அதாவது ஒரே கர்ப்பப்பை ஆனால் இரண்டாக பிரிந்திருக்கும். **இதன் காரணத்தால் எனக்கு குழந்தை பிறப்பது கடினம் என்று சொல்லி விட்டார்கள்.** நாங்கள் இருவரும் மிகவும் வேதனையடைந்தோம். பல இடங்களில் பரிசோதனை செய்து பார்த்ததில் இதையே கூறினார்கள். இந்த நிலையில் ஒரு நண்பர் மூலம் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை குறித்து கேள்விப்பட்டு ராஜமந்திரியில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டோம். தனி ஜெப வேளையில் எங்களுக்காக சகோதரர் ஜெபித்தார்கள். என் நிலைமையை அவரிடத்தில் சொன்னேன். அவர்களும் மருத்துவதுறையை சார்ந்தவர் என்பதால் மிகவும் வேதனைப்பட்டார்கள். **இருப்பினும் கர்த்தர் நிச்சயமாக உங்களுக்கு குழந்தை பாக்கியத்தை தருவார் என்று கூறினார்கள். நம்பிக்கையோடு வீடு வந்து சேர்ந்தோம். அந்த ஆண்டில் மருத்துவர்களே ஆச்சரியப்படும் வண்ணமாக கர்த்தர் எனக்கு அழகான பெண் குழந்தை பிறக்கும்படி அற்புதம் செய்தார்.** ஆனந்த மகிழ்ச்சி அடைந்தோம்! கர்த்தர் செய்த நன்மையை மறவாமல் எங்கள் பொருத்தனை காணிக்கையை சமர்ப்பிக்கிறோம்.

**- திருமதி. பிரசன்னா, கிழக்கு கோதாவரி**

## சொந்தமாக ஜெப வீட்டை கட்ட கிருபை செய்த தேவன்



நான் ஒரு சாதாரண வேலையில் இருக்கின்றேன். எனக்கு வெகு நாளாக ஒரு ஆசை. கர்த்தருக்கென்று ஒரு ஜெப அரங்கம் கட்டவேண்டும் என்று யோசித்து அதைக் குறித்து Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்கக் கேட்டேன். சகோதரர் எனது விண்ணப்பத்திற்காக ஜெபித்தார்கள். ஜெபத்தை கேட்ட தேவன் அற்புதமாக எந்த வித கடனும் வாங்காமல் அழகான ஜெப அரங்கம் கட்டிமுடிக்கும்படி அநுக்கிரகம் செய்தார். கர்த்தருக்கே மகிமை!

**- திரு. கல்யாண், துநி**

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி**
**செல் : 82203 17472**
**சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்**
**செல் : 77081 53666**

# கண்டுபிடியுங்கள்



## வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்
– யோவான் 5:39

தொகுப்பு : Dr. ஜேன் ஜாஷ்வா

**பதில்களை வசன ஆதாரத்துடன் பிழையின்றி எழுதுங்கள்**

**உதாரணம்: சௌந்தரியவான் விருந்துக்கு அழைக்கப்படவில்லை. ஆனால் அரியணை ஏற அழைக்கப்பட்டான்.**

**பதில் :**

1. சும்மா சுத்தும் ஆசாமிக்கு சோறு போட கூடாதாம் அவன் சோறும் சாப்பிடக் கூடாதாம். அவன் யார்? (ஆதார வசனம் எழுதவும்)

...............................................................................................................................

...............................................................................................................................

2. விருந்துக்கு வந்தவன் செத்துப்போனான். செத்தவன் விருந்துக்கு வந்தான். அவர்கள் யார் யார்?

...............................................................................................................................

...............................................................................................................................

3. பத்துமுறை பந்தாட மக்கள் எல்லாம் துண்டாட, எதிரிகள் நின்று கொண்டாட, தாம் மட்டும் திண்டாட, இவன் யார்?

...............................................................................................................................

...............................................................................................................................

4. மாநிலத்தில் அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா காய்கறி கடை என பெயர் வைக்கப்பட்டுள்ளது போல வேதத்தில் ஒன்றிற்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது. அது என்ன? (ஆதார வசனம் எழுதவும்)

...............................................................................................................................

...............................................................................................................................

5. யானைக்கும் அடிசறுக்கும், இவனுக்கோ முடி சறுக்கும். இவன் யார்?

...............................................................................................................................

...............................................................................................................................

6. நான் ஒரு மிருகம். எவ்வளவு தான் தண்ணீர் வந்து என்னை தாக்கினாலும் அது என்னை ஒன்றும் செய்யாது. நான் யார்? (ஆதார வசனம் எழுதவும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

7. நான் மூன்று எழுத்துள்ளவன். நான் துடித்தேன் மீனுமல்ல, நான் கொதிப்பேன் சோறுமல்ல, நான் எரிபந்தமானேன் நெருப்புமல்ல, நான் சரிந்தேன் மண்மேடுமல்ல, நான் தொனிக்கிறேன் சுரமண்டலமுமல்ல, நான் மனிதரோடு கூட எப்பொழுதும் இருந்தாலும் மறைவாயிருக்கிறேன். நான் யார்? (ஆதார வசனம் எழுதவும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

8. நான் சாப்பிடும் காய்கறிகளில் ஒன்றின் பெயர் தீவின் பெயராக உள்ளது. அது எந்த தீவு? (ஆதார வசனம் எழுதவும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

9. ஏபிசி டி படிப்போரே, ஏக் தோதீன் படிப்போரே இதனை செய்ய முதலில் படியுங்கள். எதனை செய்ய? (ஆதார வசனம் எழுதவும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

10. வேர் விட்டு பரவும், விதை இன்றி வளரும், வேதனை இதனால் பெருகும், விசுவாசம் இதனால் சரியும். அது என்ன? (ஆதார வசனம் எழுதவும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

உங்கள் முகவரி, பங்காளர் எண் மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் எழுதுங்கள்.
விடைகளைத் தெளிவாகப் புரியும்படி எழுதி இந்தப் பக்கங்களைக் கிழித்து எங்களுக்கு அனுப்பவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

விடைகள் மே மாதம் 31ஆம் தேதிக்குள் எங்களிடம் வந்து சேரவேண்டும்.

முகவரி: அன்பரின் ஊழியம், 10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

உங்களுடைய பதில்களை வினாத்தாளிலேயே எழுதுங்கள். தனிப்பிரதியில் எழுத வேண்டாம். நீங்கள் பதில்களை வைத்து அனுப்பும் கவரை அதிக பசை போட்டு ஒட்டாதீர்கள்.

## பிப்ரவரி மாத கேள்விகளுக்கான சரியான பதில்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கிதியோன் | - | யெருபாகால் |
| 2. | சாலொமோன் | - | யெதிதியா |
| 3. | யோசேப்பு | - | சாப்நாத் பன்னேயா |
| 4. | ஏசா | - | ஏதோம் |
| 5. | மத்தனியா | - | சிதேக்கியா |
| 6. | ஆபிராம் | - | ஆபிரகாம் |
| 7. | ஒசேயா | - | யோசுவா |
| 8. | தானியேல் | - | பெல்தெஷாத்சார் |
| 9. | தொற்காள் | - | தபீத்தாள் |
| 10. | எஸ்தர் | - | அத்சாள் |
| 11. | பர்சபா | - | யூதா |
| 12. | மாற்கு | - | யோவான் |
| 13. | யுஸ்து | - | பர்சபா - யோசேப்பு |
| 14. | திர்ஷாதா | - | நெகேமியா |
| 15. | பர்னபா | - | யோசே |

**சரியான விடை எழுதி குலுக்கல் முறையில் பரிசு பெறும் நபர்களுக்கு என் வாழ்த்துக்கள்**

சகோதரி. பூங்கொடி,
விருதுநகர்.
சகோதரி. மெர்லின் ஹெலன்,
தூத்துக்குடி.
சகோதரி. ராணி இரத்தினக்குமார்
மதுரை.

## WANTED FOR MINISTRY OF JESUS, TRICHY

1. **Accountant**
   B.Com.,/M.Com., Graduates
   Skills Required : Tally ERP 9 பயன்படுத்ததெரிந்தவர்கள்.
2. **Secretary**
   Any UG/PG Degree
   Skills Required : Good in written English
3. **Social Media Executive**
   Candidates with any UG/PG degree
   Skills Required
   Good in English and Tamil
   Must be familiar with Social Media platforms
   Knowledge of Photoshop is an added advantage
   Creative acumen necessary
4. **Data Entry Operator**
   Candidates with any UG/PG degree
   Skills Required : Good in computing skills
5. Prayer warriors : Qualification +2/Any degree Born again Christian only.
6. Cameraman, 7. Video Editors, 8. Drivers, 9. Cooks / Chefs
10. Housekeepers

Apply to :info@mojindia.org Apt remuneration will be given

தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமை யானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.
ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து...

- சங்கீதம் 72 : 12, 13, 4

தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவை களுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்.
தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்

- சங்கீதம் 68 : 5, 6

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!*

*எல்லா ஊழியங்களின் மத்தியிலும் கர்த்தர் நமக்கு தந்த மனதுருக்கத்தின்படியே தவறாமல் இத்தனை வருடம் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும், ஆதரவற்ற விதவைகளுக்கும், HIV ஆல் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும், கோவிட் 19-ஆல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும், அநாதை சிறுவர், சிறுமிகளுக்கும் உதவி செய்யும்படி தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு அநுக்கிரகம் செய்தபடியால் அவரை துதிக்கிறோம். வறியவர்களுக்கும், எளியவர்களுக்கும் நாம் செய்கின்ற உதவி ஆரம்பத்தில் தண்ணீரில் போடப்பட்ட ஆகாரத்தை போல இருந்தாலும் பிற்காலத்தில் அதின் பலனை நாம் நிச்சயமாய் காண்போம்.*

உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்

- பிரசங்கி 11 : 1

*சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங்களில் நாம் நன்மையானவைகளை விதைக்கும் பொழுது அந்த கள்ளம் கபடமற்ற பிள்ளைகள் தங்கள் மனதில் அவைகளை பசுமரத்து ஆணி போல பதித்துக் கொள்கிறார்கள். ஒரு பத்து வயது நிரம்பிய பெண் பிள்ளையும், 12 வயது நிரம்பிய ஒரு மாணவனும் கண்ணீர் மல்க என்னிடத்தில்* **"தாத்தா, எங்கள் வீட்டில் சாப்பாடு கிடையாது, அரசு பள்ளியில் கொடுக்கிற சத்துணவு தான் எங்களுக்கு ஆகாரம், வருமானம் குறைவின் காரணமாக கடன் எங்கள் குடும்பத்தில் வாட்டி வதைக்கிறது. அடிக்கடி அப்பா எங்களை பார்த்து நீங்கள் எல்லாம் எதற்காக பிறந்தீர்கள் என்று எங்களையும், எங்கள் அம்மாவையும் திட்டுவார்கள், குடிபோதையில் அடித்து துன்புறுத்துவார்கள். எப்போதும் எங்கள் அப்பா கெட்ட வார்த்தையை தான் பேசுவார், நல்ல வார்த்தையே அவர் வாயிலிருந்து வராது. எனவே நாங்கள் சிறு வயதிலிருந்து அவமானத்திலும், கஷ்டத்திலும், கெட்ட வார்த்தைகளின் மத்தியிலும் தான் வாழ்ந்து வருகிறோம். என்றைக்கு நீங்கள் நடத்தும் ட்யூசன் மையத்திற்கு வந்தோமோ அன்றிலிருந்து நல்லொழுக்கத்தை கற்றுக் கொண்டோம். நீங்கள் எங்களுக்கு கொடுக்கும் உணவு, உடை மற்றும் சொல்லிக் கொடுக்கும் ட்யூசன் தான் எங்கள் வாழ்வின் ஆதாரம். நாங்கள் முற்றிலும் நல்ல பிள்ளைகளாக மாறிவிட்டோம். எங்கள் அப்பா எப்படி எங்களை திட்டினாலும் நாங்கள் பதில் பேசாமல் அமைதியாக இருப்போம். அப்பா எப்போதும் குடிப்பதால் நாங்கள் எங்கே போகிறோம், என்ன செய்கிறோம் என்று தெரியாது. அம்மாவின் கட்டளையின்படி இந்த ட்யூசன் மையத்திற்கு தவறாமல் ஐந்து வருடமாய் வருகிறோம். இங்கே கொடுக்கப்படும் நல்ல உணவும், மருந்துகளும் எங்கள் பெலவீனங்களை நீக்கி இப்பொழுது நீங்கள் காண்கிறபடி எங்களை பிரகாசமாய் வைத்திருக்கிறது. எங்கள் தகப்பன் செய்ய வேண்டிய வேலைகளை நீங்கள் உங்கள் ட்யூசன் மையம் மூலம் செய்கிறீர்கள். உங்களுக்கும் எங்களுக்கும் எந்த விதமான உறவு இல்லாவிட்டாலும், யாரோ பெற்ற பிள்ளைகள் மீது இவ்வளவு கரிசனை கொண்டு எங்களை ஆதரிப்பதை பார்க்கும் பொழுது உண்மையான தெய்வீக அன்பை நாங்கள் உணர்ந்து கொள்கிறோம். முன்பெல்லாம் எங்களுக்கு ஒரு தைரியமும் வராது. பள்ளிக்கு போக தயக்கம் எங்களை வாட்டும். பள்ளியில் சொல்லிக் கொடுப்பது எங்களுக்கு புரியவும் புரியாது. ட்யூசன் வைக்கவும் எங்கள் வீட்டில் வசதியில்லை.**

வறுமையின் நிமித்தமாக ஐந்து வயதிலேயே கூலி வேலைக்கு செல்வோம் (பூ பறிக்கும் வேலை, களை எடுப்பது) எங்களுக்கு கிடைக்கும் பணத்தையும் அப்பா பிடுங்கிகொள்வார். பல நாட்களில் காலையும், இரவும் சாப்பாடு இருக்காது. ஒரு வேளை உணவு தான். ஆனால் இப்பொழுது நாங்கள் வயிறார நல்ல உணவை உங்கள் ட்யூசன் மையம் மூலமாக சாப்பிடுகிறோம்" என கண்ணீர் மல்க கூறினார்கள். இதைக் கேட்ட பொழுது என் உள்ளம் எனக்குள் உருகிற்று. இப்படி எத்தனையோ பிள்ளைகள் தங்களுடைய பரிதாப நிலையை குறித்து ஒவ்வொரு முறையும் நான் போகும்பொழுது சொல்வார்கள். அன்பான இந்த பிள்ளைகள் அன்பற்ற ஒரு சூழ்நிலையில் வளர்வதை பார்க்கும் பொழுது மனதிற்குள் ஒரு பாரம் உண்டாகிறது.

எனக்கன்பான தேவ ஜனமே! நீங்களும் இப்படிப்பட்ட ஏழை பிள்ளைகள் மீது அன்பு கூறும் பொழுது அன்பற்ற சூழ்நிலையில் வாழும் பிள்ளை களை தேவனிடம் கொண்டு வருகிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். தொடர்ந்து நாம் இப்பணியில் முன்னேறுவோம். அப்பொழுது நம் வாழ்க்கையில் அதிசயமான காரியங்களை காண்போம்.

ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக

- 1 கொரி. 15 : 58

ஏப்ரல் மாதம் சேலம் மாவட்டம் பெருமாள் பாளையம், பெருமாள்புரம், நாட்டமங்களம், இந்திரா நகர் மற்றும் பத்தாங்கல்மேடு ஆகிய பகுதிகளில் உள்ள 350 மாணவ, மாணவிகளுக்கு நல்ல உணவு கொடுத்தோம்.

கடந்த மாதத்தில் நாம் குறிப்பிட்டது போல இடிந்து விழும் நிலையில் உள்ள, மண் சுவரால் கட்டப்பட்டு இருக்கிற ஓலை குடிசையில் வாழுகிற, யாருமற்ற அநாதைகள், விதவைகளுக்கும், வயதானவர்களுக்கும் ஒரு சிறிய அளவில் நல்ல வீட்டை உண்டு பண்ணி தர முயற்சிகள் மேற் கொண்டுள்ளோம். மண் சுவரை, ஓலைகளை அகற்றி ஓரளவு நன்றாக கட்டிக் கொடுக்க Rs.50,000/- முதல் Rs.1,00,000/-வரை தேவை. இந்த புதிய முயற்சிக்கு உங்கள் ஆதரவு தேவை. எனவே அன்புள்ளம் கொண்ட நீங்கள் இப்படிப்பட்ட ஒரு ஏழைக்கு ஒரு வீட்டை கட்டித் தர முன்வாருங்கள். கர்த்தர் இதற்குரிய பலனை திரும்ப தந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**



**ஏப்ரல் மாதம் சேலம் மாவட்டம் பெருமாள் பாளையம், பெருமாள்புரம், நாட்டமங்களம், இந்திரா நகர் மற்றும் பத்தாங்கல்மேடு ஆகிய கிராமங்களில் உள்ள 350 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கினோம்.**


















# S.J.S.T. HOSPITAL

## கிராமப்புற மருத்துவ சேவை மையம்

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக் கடவர்கள்.

அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். - யாக்கோபு 5 : 14, 15

...அவர் துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்த வருமாயிருந்தார் - ஏசாயா 53 : 3

மேற்கூறிய வேத வசனங்களின்படி வியாதி பட்டவர்களுக்காய் நாம் ஜெபிக்கும்பொழுது நம் அருள்நாதரின் அன்பு சீடர் நமக்கு மிக அருமையான அறிவுரை கூறுகிறார். நாம் எண்ணெய் பூசி ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறார். இதற்கென்று பிரத்தியேகமாக ஜெப எண்ணெயை ஆயத்தப்படுத்தி உள்ளோம். விசுவாசத்தோடு அதனை வியாதியுள்ளவர்களின் தலையில் சிலுவை அடையாளத்தை போட்டு ஜெபிக்கும்பொழுது கர்த்தர் கேட்கிறார். எண்ணெயில் எந்தவித வல்லமையும் இல்லை. ஆனால் அந்த எண்ணெயை நாம் ஜெபிக்கும் பொழுது கர்த்தருடைய அபிஷேகத்தையும், கர்த்தர் நமக்காக சிந்தின மாசற்ற இரத்தம் மற்றும் அவரது காயங்களையும் நினைக்கிறோம். அப்படியாக நினைவு கூர்ந்து ஜெப எண்ணெயை தடவி ஜெபிக்கிறோம். அப்பொழுது எப்படிப்பட்ட நோயையும் கர்த்தர் இயேசு குணமாக்குகிறார். பாவத்தின் நிமித்தம் அவர்கள் நோயாளியாக இருந்தாலும் விடுதலை தருகிறார். நாம் அவர்களுக்காக ஜெபிக்கும்பொழுது கர்த்தர் அவர்கள் பாவங்களை மன்னித்து அவர்களை குணமாக்குகிறார். (மத்தேயு 9: 1-8)

எண்ணெய் பூசி ஜெபிப்பது மாத்திரமல்ல, கர்த்தர் கொடுத்த ஞானத்தினை பயன்படுத்தி மருத்துவர்களும், செவிலியர்களும் தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு ரண சிகிச்சைக்கான மருந்துகளையும் கொடுத்து நோயாளிகளை சுகமாக்குவதில் அக்கறை காண்பிக்கிறார்கள். ஆம், ஒரு மனிதனுக்கு தீராத வியாதி வரும் பொழுது வியாதிப்பட்டவர்கள் மாத்திரமல்ல, அவரது குடும்பமே அதிக கஷ்டத்திற்குள்ளாகின்றனர். வியாதியுள்ளவர்கள் படும் வேதனை ஒரு பக்கம், மருந்துகளுக்காக செலவழிக்க வேண்டிய பணக் கஷ்டம் மற்றொரு பக்கம். தங்களுக்கு மிகவும் அன்பான பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள், பெற்றோர், தாத்தா, பாட்டி கஷ்டப்படுவதை பார்க்கும்பொழுது உண்மையான அன்புள்ளவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். ஏனென்றால் வியாதி அந்த அளவிற்கு கொடுமையானது. இப்போதும் நம் நாட்டில் கோவிட்-19 இரண்டாவது அலையின் நிமித்தம் எத்தனையோபேர் பாடுபடுகிறார்கள், வேதனையடைகிறார்கள். அவர்கள் அனை வருக்காகவும் நாம் ஜெபிப்போம். மேலும், சிறுநீரகக் கோளாறு, இதய நோய் இன்னும் மருத்துவமே கண்டுபிடிக்க முடியாத காலமெல்லாம் வேதனைப் படுத்தும் வியாதிகள் ஒரு மனிதனை எவ்வளவாக பாழ்படுத்துகிறது. இதனால் மக்கள் நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். தேவன் மீது வைக்கும் விசுவாசமும் போய்விடுகிறது. இந்நிலையில் தான் நாம் அவர்களுக்கு இருளில் ஒளிவீசும் சுடரைப் போல இந்த மருத்துவமனையின் மூலம் நம்பிக்கையின் விளக்கை ஏற்றுகிறோம். குறைந்த செலவில் அநேக ஏழைகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் நமது கிராமப்புற மருத்துவமனை ஆரம்பித்துள்ளோம். நல்ல பலனை தரும்படி ஜெபியுங்கள். இந்த மருத்துவமனைக்கு உதவி செய்கிற உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. பொருத்தனை செய்து இப்பணிகளை தாங்குங்கள். கர்த்தர் நிச்சயமாய் உங்கள் வியாதிகளை நீக்குவார்.

தொடர்ந்து நாம் கஷ்டப்படுகிற மக்களுக்கு நன்மை செய்வோம்.

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.

தீராவியாதி அவனைப் பிடித்துக் கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள்.

படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்-

- சங்கீதம் 41 : 1, 2, 8, 3


## வாசகர்கள் கவனத்திற்கு

இப்பத்திரிக்கையை வாசிக்கின்ற வாசகர்களாகிய உங்களில் யாருக்காவது நமது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் நீங்கள் வந்து சிகிச்சை பெறலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9655318991

வரும் வழி : திருச்சி மத்திய பேருந்துநிலையத்திலிருந்து திண்டுக்கல் சாலையில் (சுமார் 15 கி.மீ) உள்ள ஜே.ஜே. பொறியியல் கல்லூரி விடுதியின் எதிர்புறத்தில் நமது மருத்துவமனை உள்ளது.

## தேவை

அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விண்ணப்பிக்கவும்.

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org, sjsavestrust.in



# உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்

## ஏசாயா 38:5

**தேவ செய்தி : Mrs. மார்கிரேட் ஸ்திரா**

பிரியமான தேவ பிள்ளைகளே!
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

இந்த நாளிலும் உங்களை இந்த செய்தியின் வாயிலாக சந்திப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கிறது. உலகமெங்கும் பலவிதமான பிரச்சனைகளினாலும், வாதைகளினாலும் உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே தேவனாகிய கர்த்தர் உங்களோடுகூட இருந்து உங்களை கண்ணின் மணியைப் போல பாதுகாக்க வேண்டுமென்று ஊக்கத்தோடு ஜெபிக்கிறோம். இந்த பத்திரிக்கையிலும் மேற்கூறிய இந்த வசனத்தில் எழுதப் பட்டிருக்கிற இந்த ஆறுதலான வார்த்தையை குறித்து நாம் தியானிக்கப் போகிறோம். உலகத்தில் நாம் அநேக பேரிடத்திலே அநேக விதமான கோரிக்கைகளை, விண்ணப்பங்களை வைக்கிறோம். ஆனால் அவை அனைத்தும் நிறைவேறும் என்கின்றதான உத்திரவாதம் நம் ஒருவருக்கும் இல்லை. ஒருவருக்கு நிறைவேறுகின்ற காரியம் மற்றொருவருக்கு நிறைவேறாமல் போகலாம். ஒருவர் கஷ்டப்பட்டு உழைத்து போராடி வாங்குகின்ற ஆசீர்வாதம் மற்றொருவருக்கு சுலபமாக, துரிதமாக எந்த முயற்சியும் இன்றி கிடைத்துவிடலாம்.

ஆம்! மனிதனுடைய வாழ்க்கை எப்போதும் அப்படித்தான். மேற்சொல்லப்பட்ட வசனத்தில் நம்மை படைத்த சிருஷ்டி கர்த்தராகிய தேவன் கூறுகின்ற வாக்குத்தத்ததை பார்க்கிறோம். இந்த வசனத்தின் பின்னணியை நாம் பார்க்கும்பொழுது எசேக்கியா ராஜாவினுடைய வாழ்க்கையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். எசேக்கியா மிகப் புகழ்பெற்ற ஒரு ராஜா. தேவன் அவனுடைய வாழ்க்கையில் பலவிதமான வெற்றிகளை கொடுத்தார். ஆனால் அந்த வெற்றிகளுக்கு பிற்பாடோ நடந்தது என்ன? இந்த ராஜாவிற்கு மரணத்திற்கு ஏதுவான வியாதி ஏற்படுகின்றது. குணமாக்க பல முயற்சிகளை எடுத்தும் முடியாமல் போயிருந்த காலத்தில் **ஏசாயா தீர்க்கதரிசி நீ மரித்துப் போவாய் என்று எசேக்கியாவினிடத்தில் கூறுகிறான்.** இந்த வார்த்தையை கேட்ட எசேக்கியா மிகுந்த துக்கப்பட்டு மனமுடைந்து அழுகிறதை நாம் பார்க்கிறோம். ஏன்? எசேக்கியாவிற்கு அந்த நேரத்திலே மரித்து போவதற்கான விருப்பமும் இல்லை, ஆயத்தமும் இல்லை. என்ன காரணம் என்று குறிப்பாக கூறப்படாவிட்டாலும் ஒருவேளை எசேக்கியா ராஜா தன்னுடைய ராஜ்ஜியத்தின் மூலம் இன்னும் அதிகமாய் ஏதாகிலும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்து இருக்கலாம். அல்லது தன்னுடைய கடைசி காலத்தில் இன்னும் அதிகமாய் நன்மைகளை அனுபவிக்க வேண்டும் என்று நினைத்து இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் இங்கு தேவன் எசேக்கியாவிற்கு வாக்குத்தத்தம் பண்ணுகிறார். என்ன வாக்குத்தத்தம் **" உன் கண்ணீரை கண்டேன், உன் விண்ணப்பத்தை கேட்டேன்"** என்று கூறுகிறார். தான் மரித்துப் போவேன் என்று ஏசாயா சொன்ன மாத்திரத்தில் எசேக்கியா துக்கப்பட்டு கதறி அழுகிறான். **அவனுடைய கதறுதலுக்கு தேவன் பதிலளிக்கிறார்.**

நாமும் கூட அநேக சமயங்களில் நான் கதறுகிறேனே ஏன் தேவன் என்னுடைய வாழ்க்கையில் பதிலளிக்க மாட்டேன் என்கிறார் என்று துக்கத்தோடு இருக்கலாம். நம்முடைய வாழ்க்கையிலும் அவர் நம்முடைய கண்ணீருக்கு பதில் கொடுக்க வல்லவராய் இருக்கிறார். இதற்கான காரணத்தை குறித்து நாம் தியானிப்போம்.

## தேவனுக்கு முன்பாக உத்தமமாய் நடந்தான்

எசேக்கியா ராஜா தான் வாழ்ந்த காலத்தில் தன்னால் இயன்ற அளவிற்கு தேவனுக்கு கீழ்ப்படிந்து மிகவும் உண்மையும், மனஉத்தமமாய் நடந்தான் என்று வேதம் கூறுகிறது. **2 ராஜாக்கள் 18:3-8** வசனங்களில் நாம் பார்க்கிறபடி **"தான் ராஜாவான உடனேயே எசேக்கியா அந்த தேசத்திலிருந்த தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் எல்லா**

வற்றையும் அகற்றி அவருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தான்" என்று எழுதப் பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேக்கு கற்பித்த எல்லா கற்பனைகளுக்கும் அவன் கீழ்ப்படிந்து நடந்தான். அதுமாத்திரமல்ல, ராஜா என்கின்ற ஸ்தானத்தில் இருந்து செம்மையானதை மாத்திரம் செய்து தான் மாத்திரம் நல்லவனாக மாறாமல் தன் தேசத்தையும் அவ்வாறாக நடத்தினான். 2 நாளாகமம் 29, 30ஆம் அதிகாரம் முழுமையையும் நாம் வாசித்தால் அங்கே எசேக்கியா ராஜா தன்னுடைய தேசத்திலிருந்த லேவியர்களுக்கும் மற்றும் பிரபுக்களுக்கும் தேவனுடைய ஆலயத்தை பராமரிக்கவும், சுத்தப்படுத்தவும், பழுது பார்க்கவும் மக்களை கர்த்தருடைய வழியில் நடத்தவும் சொல்லி கொடுக்கிறான். ஒரு ராஜா இதை செய்ய வேண்டிய அவசியமே இல்லை. **ஆலயத்திற்கு அடுத்த காரியங்களிலும், தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதிலும் ராஜா முனைந்து நிற்கிறான்.** இது தான் மிக மிக அவசியமான காரியம் பிரியமானவர்களே! நாம் தேவனை முழு இருதயத்தோடு தேடி அவருடைய பாதைகளில் நடக்கும்பொழுது நாம் எப்போது கூப்பிட்டாலும் அவர் நம்முடைய விண்ணப்பங்களுக்கு செவி கொடுக்கிறவராக இருக்கிறார்.

அதுமாத்திரமல்ல, எசேக்கியா ராஜா தன்னால் இயன்ற அளவிற்கு தேவனுக்கு கொடுத்தான். மக்களையும் கொடுக்க வைத்தான். அவர்கள் தங்கள் முதற் பலன்களை பரிபூரணமாய் தேவலாயத்திற்கு என்று கொடுக்க உற்சாகப் படுத்தினான். **2 நாளாகமம் 31:21 " அவன் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப் பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்தி பெற்றான்"** என்று சொல்கிறது.

இதுதான் பிரியமானவர்களே! தேவனுக்கு முன்பாக உண்மையும், உத்தமமுமாய் நடப்பது. நம்முடைய வாழ்க்கையை நாம் யோசித்து பார்ப்போம். நாம் எத்தனை முறை தேவனைவிட்டு பின்வாங்கி இருக்கிறோம். **உலகத்தின் ஆசீர்வாதங்களை நினைத்து நாம் தேவனுடைய காரியங்களில் பின்வாங்கி விடுகிறோமே? அப்படி ஒருபோதும் இருக்கக்கூடாது. உலகத்தின் காரியங்களை பின் வைத்துவிட்டு தேவனுடைய பிள்ளைகளாய் அவரை உத்தமமாய் பின்பற்றுவோம்.** அப்பொழுது நம் வாழ்க்கையில் மிகப்பெரிய ஒரு திருப்பத்தை காண முடியும்.

## தன் இக்கட்டிலே கர்த்தரையே நோக்கினான்

எசேக்கியா ராஜா வியாதிப்பட்ட பொழுது அவன் ராஜவாக இருந்தபடியால் அநேக மருத்துவர்கள் அவனுடைய தேவைக்கு இருந்திருப்பார்கள். அவன் நினைத்தபடி எல்லாம், வேண்டினதை காட்டிலும் அதிகமாய் சிகிச்சை அளித்திருப்பார்கள். ஆனால் **தேவனோடு நெருக்கமாய் இருந்த எசேக்கியா தன்னுடைய இக்கட்டில் தேவனை நோக்கிப் பார்க்கிறான்.** மனுஷனை நம்புவதை காட்டிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம் என்று வேதம் சொல்கிறது. அதை எசேக்கியா தன்னுடைய வாழ்க்கையில் உண்மையாகவே நடப்பித்து காட்டினான். அசீரியாவின் ராஜா தனக்கு விரோதமாய் வந்தபோதும் தேவனுடைய ஆலயத்திற்கு சென்று விண்ணப்பம் பண்ணினதை நாம் வேதத்தில் பார்க்க முடியும். **(ஏசாயா 37:14,20)** மகா இக்கட்டான நேரத்தில் கூட எசேக்கியா ராஜா கலங்கவில்லை. தன் கலக்கத்தை தேவனிடத்திலே தெரியப்படுத்துகிறான். ஆகவே தான் அங்கே மிகப்பெரிய அற்புதங்கள் நடைபெறுகின்றது. நமக்கு கஷ்டங்கள் வரும் பொழுது, பிரச்சனைகள் வரும்பொழுது நாமும் எசேக்கியாவை போல கர்த்தரை மாத்திரம் நோக்கி பார்க்கிறோமா? நம்முடைய கண்கள் உலகத்தின் நிவாரணங்களுக்கு நேராய் செல்கிறதா? அல்லது கர்த்தருடைய நாமத்திலே விடுதலை வர வேண்டும் என்று நினைக்கின்றதா? இது உங்களுக்கும், தேவனுக்கும் மாத்திரமே தெரிந்த காரியம். உங்களுடைய இருதயம் அவருக்கு முன்பாக பலட்சியமாய் இருக்கிறது. ஆகவே இன்றைக்கே எல்லா உலகப் பிரகாரமான நம்பிக்கைகளையும் விட்டுவிடுங்கள். நாம் எவ்வளவுதான் நல்லவர்களாக நடந்தாலும் உலகம் நமக்கு ஒருபோதும் மிகப்பெரிய நன்மையை செய்துவிடாது. ஏனெனில், உலகத்தின் வல்லமை அவ்வளவு தான். **நம்முடைய தேவாதி தேவனோ நமக்காக சிலுவையிலே மரித்து நம்மை நேசிக்கிற தேவனாக இருக்கிறார். நம் மீது அக்கறை உள்ளவராக இருக்கிறார்.** ஆகவே அவருக்கு உங்களுக்கு என்ன வேண்டும் என்று நன்கு தெரியும். உங்கள் கண்கள் அவரை நோக்கி இருக்கும்பொழுது அவர் உங்களுக்கு நிச்சயம் செவி கொடுப்பார்.

## அற்புதம்

உத்தமமாய் நடந்த எசேக்கியா தேவனை நோக்கி பார்த்த பொழுது அங்கே மிகப்பெரிய

அற்புதத்தை அவன் காண்கிறான். **மரித்துக் கொண்டிருந்த அவனுக்கு ஜீவனுள்ள தேவன் 15 வருடங்களை கூட கூட்டிக் கொடுக்கிறார்.** அதுமாத்திர மல்ல, **அடையாளமாக ஆகாசுடைய சூரிய கடிகாரத்தில் சாயை 10 பாகை பின்னிட்டு போகப் பண்ணுகிறார். (2 ராஜாக்கள் 20:9-11).** தன்னை நேசித்த ஒரு மனிதனுக்காக தேவன் ஜீவனை கொடுத்தது மட்டுமல்லாமல் நேரத்தையே மாற்றி அமைக்கிறார் பாருங்கள். எவ்வளவு வல்லமையான தேவன் அல்லவா? அவராலே செய்யக் கூடாத காரியம் ஒன்றுமில்லை. எனவே சோர்ந்து போகாதிருங்கள்! உத்தமமாய் அவரை பின்பற்றுங்கள். அவர் உங்களுக்கு சமீபமாய் இருந்து உங்கள் விண்ணப்பங்களை கேட்டு உங்களுக்கு அற்புதங்களை செய்வார்.

**தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர் கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார் உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் - சங்கீதம் 84:11**

**தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்**

**- சங்கீதம் 145:18**

மேற்கூறிய வசனங்களின்படி கர்த்தர் உங்களுக்கு சமீபமாய் இருந்து நன்மைகளை வழங்குவார்.


# திருநெல்வேலி ஜெபமையம்

**திருநெல்வேலியில் அன்பரின் ஊழிய ஜெப மையம் கீழ்க்கண்ட முகவரியில் ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை இயங்கி வருகின்றது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள் எளிதாக வந்து செல்வதற்குரிய இடத்தில்தான் அலுவலகம் அமைந்துள்ளது. நீங்கள் யாவரும் நம்முடைய ஜெப மையத்திற்கு வந்து ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுச் செல்லவும். நிச்சயமாகவே ஜெப மையத்திற்கு வருகின்ற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துகிறார்.**

## ஜெப மைய முகவரி

அன்பரின் ஊழிய ஜெப மையம், க.எண். 41B/2A, முதல் மாடி,
திருவனந்தபுரம் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
குறிப்பு:- பாளை பேருந்து நிலையம் அருகில், LIC அலுவலகத்திற்கும் ஸ்டேட் பாங்குக்கும் இடையிலுள்ள கட்டிடத்தின் முதல் மாடி
அலுவலக அலைபேசி எண்: 94889 08328

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

| நம்பிக்கை TELEVISION | தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் | மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் காலை 6.30 – 7.00 | SUBHAVAARTHA TELEVISION வெள்ளி மாலை 6.00 – 6.30 | HARVEST TV சனி இரவு 07.30 – 08.00 |
| புதன் மதியம் 12.00 – 12.30 | ARADANA TV புதன் மாலை 6.00 – 6.30, சனி மதியம் 2.30 – 3.00 | ஆங்கிலத்தில் |
| வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.30 – 9.00 | | GOODNEWS TELEVISION வியாழக்கிழமை இரவு 8.30 – 9.00 |

# உலகச் செய்திகள்



எகிப்தில் பூமிக்கு அடியில் புதைந்துபோன மூவாயிரம் ஆண்டுகள் பழமையான நகரம் ஒன்று கடந்த செப்டம்பர் மாதம் கண்டறியப்பட்டது. தோண்டி எடுக்கப்பட்ட இந்த நகரத்தின் பெயர் ஆட்டென் என்றும் இதை **"தொலைந்து போன தங்க நகரம்"** என்றும் குறிப்பிடுகிறார் எகிப்தின் தொல்லியல் நிபுணர் ஸாஹி ஹவாஸ்.

இந்த நகரம் எகிப்தின் தலைநகர் கெய்ரோவி லிருந்து சுமார் 500 கி.மீ. தொலைவில் லக்சர் என்ற நகருக்கு அருகில் அமைந்திருக்கிறது. இந்த இடத்தை தோண்ட தோண்ட பேரின்ப அதிர்ச்சி ஆய்வாளர் களை சூழ்ந்து கொண்டது.

## தங்க நகரம்

இந்த இடத்தை தோண்ட தொடங்கிய சில வாரங்களிலேயே அந்நகரத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள் பலவும் கிடைக்கத் தொடங்கின. தற்போது வரை மக்கள் வசித்த பகுதிகள், சேதமடையாத மதில் சுவர்களும், சேமிப்பு கிடங்குகள், பேக்கரி மற்றும் அவன் போன்றவைகள் கிடைத்துள்ளன.

## எகிப்து நாகரீகம்

அந்நகர மக்கள் தங்கள் தினசரிவாழ்வில் பயன் படுத்திய பொருட்கள், கருவிகள் போன்றவற்றை வைத்து பார்க்கும் போது இது மிக நாகரீகமான நகரமாக இருந்திருக்கக் கூடும் என்கிறார் ஸாஹி ஹவாஸ். இந்நகரம் எகிப்தைஆண்ட மூன்றாம் ஆமென்ஹோடெப் காலத்தை சேர்ந்த நகரமாக கருதப்படுகிறது. இவர் பாரோமன்னர்களுள் ஒருவர்.

## பொருட்களின் குவியல்

இவரதுஆட்சியில் மக்கள் பயன்படுத்திய நகைகள், உருள்வண்டு பொறிக்கப்பட்ட தாயத்துகள், வண்ணம் பூசப்பட்ட மண்பாண்டங்கள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவரது ஆட்சி காலத்திற்குப் பிறகு அய் மற்றும் துத்தன்காமுன் ஆகியோரும் இந்நகரத்தில் வாழ்ந்து வந்திருக் கிறார்கள் என்றும் அறியப்பட்டுள்ளது.

## முக்கிய கண்டுபிடிப்பு

துத்தன்காமுன் கல்லறை 1922 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. அதற்கு பிறகு இதுவே முக்கியமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது என்கிறார் பெஸ்டி பிரியன். இவர் எகிப்து வரலாற்றை ஆய்வு செய்துவருபவர். மேலும் இவர் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியராவார்.

## கல்லறைகள்

1888ஆம் ஆண்டு முதல் 1889ஆம் ஆண்டு வரையிலும் மேலும் 1912ஆம் ஆண்டு முதல் 1920 ஆம் ஆண்டு வரை பல ஆராய்ச்சியாளர்கள் இந்த இடத்தில் ஆராய்ச்சி செய்ய மிகுந்த ஆர்வம் காட்டி வந்தனர். மேலும் பல பொக்கிஷங்களும், கல்லறை களும் கிடைக்கலாம் என எதிர்பார்க்கிறோம் என்கிறார் ஹவாஸ்.

## சுற்றுலா வளர்ச்சி

நியூயார்க் நகரின் **"மெட்ரோ போலிட்டன் மியூசியம்"** முதல் முறையாக இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ள அதன் குழுவை அனுப்பி வைத்தது குறிப்பிடத்தக்கது. எகிப்து அதனுடைய சுற்றுலா துறையை மேம்படுத்தவும் தொன்மையான வரலாற்றை உலகின் வெளிச்சத்திற்கு கொண்டு வரவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

வரலாறுகள் சுவாரஸ்யமானவை வரலாறுகள் எப்போதுமே நாம் வாழ்ந்த பழைய வாழ்க்கையின் பொக்கிஷத்தை நமக்கு எடுத்துக்காட்டும். புதைந்து போனநமது பழைய முகங்களைக் காணும்போது நாம் எப்படி வாழ்ந்தோம். எப்படி வந்தோம் என்பதை அறிய முடியும். அந்த வகையில் தொலைந்துபோன இந்த தங்கநகரம் எகிப்தியர்களுக்கு மட்டுமல்ல. ஒட்டு மொத்த மனித குலத்துக்கும் பல புதிய பழங்கதைகளைச் சொல்லும் என்றும் நம்பிக்கை யோடு எதிர்பார்த்திருப்போம்.